உ

கணபதிதுணை.

# சங்கரனந்தாதி

# சிவசங்கரபதிகம்

இவை,

நாகபட்டணத்துக்கடுத்த

வடக்குப்பொய்யூரென்றுவழங்கும்

பொய்கைநல்லூர்ஸ்தலத்தில் வசிப்பவரும்

சந்தான குரவர்களில் ஒருவராகிய

பரஞ்சோதிமகாமுனிவர் சந்ததி

வயித்தியலிங்கதேசிகரவர்கள்குமாரரும்

வருணகுல வம்சத்தவர்கட்கு ஆசாரியருமாகிய

**சுப்பையதேசிகரவர்களால்**

இயற்றப்பட்டு,

கருங்குழிக்குச்சமீபம் வடபுலியூரில்வசிக்கும்

அறிவுருவாய்விளங்கிய

**சிதம்பரம்-இராமலிங்கசுவாமிகள்**

அநுமதிப்படி

கூடலூரைச்சேர்ந்த சிங்காரத்தோப்பில்வசிக்கும்

வருணகுலதிபரான

**செவத்தாநாட்டாரவர்கள்**

முயற்சியால்

---

சென்னபட்டணம்

ஊ. புஷ்பரதச்செட்டியாரவர்களது

கலாரத்நாகரம் என்னும் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டன.

பிரபவஞு ஆவணிமீ

உ

முருகையன் துணை

# சங்கரனந்தாதி.

## காப்பு.

### நேரிசைவெண்பா.

சி[illegible]த்தசெஞ்சடையோன் சித்சங்கரப்பெருமான்
பேர்பூத்தவந்தாதி பேசுதற்குப்—பார்போற்றும்
இன்சொறருகுஞ்சரத்தின் இரஞ்சிதச்சதங்கைகொஞ்சுங்
கஞ்சமலர்ச்செஞ்சரணங் காப்பு.

### கட்டளைக்கலித்துறை.

பூவிலயன்றிரு மான்மறைதேடிப் புகலரிய
பூவிலயனைப் பொடியாக்குஞ் சங்கரன்பொற்பதுமப்
பூவிலயம்புனை ரந்தாதிசொற்றுணைப் புந்திவன.
பூவிலயனருள் குஞ்சிதச்சேவடிப் போதெனக்கே. (௧)

போதெனக்கேயவ மாகாதென்னுள்ளம் புகுந்துதினைப்
போதென்க்குன்னை மறவாதசிந்தையும் புத்தியுமெப்
போதெனக்கேவரச் செய்வதுமன்றிப் புனிதபதப்
போதெனக்கேசிர மீதேற்றுசங்கர புண்ணியமே. (௨)

சங்கரனுமென்றுன் றாளடைந்தாலது தற்பரசி
சங்கரமான வடியார்க்குண்டோதுயர் சாட்சியும்பா
[illegible]ங்கரங்கொண்டு வருவோனையோர்தவத் தன்பனுக்காய்ச்
சங்கரஞ்செய்தறி யாச்சுகமீந்தநுஞ் சத்தியமே. (௩)

ச[illegible]தியமாகவுஞ் சங்கரநின்பதஞ் சார்ந்தவென்வ
சத்திலெமனணுகா தஷ்டசித்தியுந் தந்துமம்பு
சந்தியகமகிழ் தேயசுமாயுசுந் தாவிடைமேற்
சத்தியுமாய்வந்தென் சென்மப்பிணியினைச் சங்கரியே. (௪)

சங்கரிபாக னடியார்க்கெளியவன் றாழுங்கைவி
சங்கரித்தோலுரி சாத்துமறைதிகன் றாளிணைகள்
சங்கரிபூவரி தாமரைதேடு மிதயவன
சங்கரியாயென் வினைகளைச்சங்கரி சங்கரமே. (௫)

கரந்தலைகொண்டவன் சங்கரன் பாதங் கருத்திலுன்னிக்
கரந்தலைகொண்ட வடியார்குழாத்துட் கலந்துபஞ்சாக்
கரந்தலைகொண்டு தனித்திடுவாய்மல கன்மதுன்பங்
கரந்தலைகொண்ட மனமேசுகமுத்தி கைவருமே

கைவருமின்பக் கெட்டறுந்தீவினை கன்மமிவ
கைவருந்துன்பங் கரந்திடுந்தேகத்திற் காட்டியதொ
கைவருநோய்களுங் காறுபுரங்கள் கனற்படங
கைவருஞ்சங்கரன் றாளைநினைந்து கருதினர்க்கே. (எ)

கருதிநினைந்தயன் சங்கரன்பாதங் கலந்தவன்பர்
கருதிப்பின்னோர்வர மாட்டாமைகண்டு கனன்றுனசு
கருதிப்பினோர்வர மாட்டாமைகண்டிந்தக் காசினியைக்
கருதியறிவிலர் துன்பத்துளாழ்ந்து கலங்குவரே. (அ)

கலங்குநெஞ்சேயிப் பிரபஞ்சமாயையின் கட்டறுக்கக்
கலங்குதில்லாயது வேசுகவாரம்ப காரணமா
கலங்குறுசற்சித்து மானந்தமாகிய காட்சியவை
கலங்குறுசங்கரன் பேரருளாலிது காண்பதுவே. (கூ)

பேரருள்பெற்றுநற் சங்கரன்றாள் பிரியாதடைந்த
பேரருள்பெற்றுச் சுகசாகரம் பிரியாதனந்தம்
பேரருள்பெற்றுச் சுகிக்கவுங்கண்டிந்தப் பேருலகப்
பேரருள்பெற்று மலைவதென்றேயிது பேதமையே. (க0)

பேதமையாலிச் சகமாயையைப் பிரியாதுசயம்
பேதமையாதெது வென்றுணர்ந்தே பிரியாதவரம்
பேதமைசெய்வினை யென்றேயுணர்ந்த பெரியவர்பின்
பேதமையேயுணர் சங்கரனானந்தப் பேரொளியே. (கக)

ஆனந்தப்பேரொளி யாய்நிறைவாகி யகண்டசச்சி
தானந்தத்தாண்டவ மாடியசங்கர னம்புயத்தாள்
ஆனந்தசாகர மூழ்கிச்சுகிக்கறி யாமலையோ
ஆனந்தப்பேர்சுக மெய்யெனவேதுக்கத் தாழ்கின்றதே. (க௨)

துக்கத்திலாழ்ந்து சுகமறியாது சுழன்றுமனை
துக்கத்திலார்களைச் சூழ்ந்துசுகானந்தச் சோதியென்ற
துக்கத்திலாவகை யாகுமெனையிந்தத் துன்பமென்ற
துக்கத்திலாவகை சங்கரன்செய்தது சூழ்ச்சியதே. (கங)

செய்திடுஞ்சூழ்ச்சியை யென்சொல்லுவே னிச்சகமுழுதுஞ்
செய்திடுஞ்சத்தி சுகதுக்கமென்றலைந் தேனைமனை
செய்திடும்வாதையு மீட்கவுநோக்கஞ் செறிந்துசுகஞ்
செய்திடுஞ்சங்கர னநந்தவாரிதிச் சேவடியே. (கச)

...வடிகிததமுந் தான்றொழுதேத்தித் திகழ்ந்திடுநெஞ்
...பார்கடங் கூட்டம்விடாது தினமுமனை
...ண்டி புரிந்திடுவாய்சென்ம மானதுநஞ்
...ரனனந்தச் சீர்தருமே. (கரு)

சீர்தருமென்று மண் பெண்பொன்னைத்தேடித் தினமலைந்த
சீர்தருமத்தை மறந்தேசெகத்தினி லாசையைவைச்
சீர்தருந்துன்பமி தெல்லாமறந்த சிற்சோதிமயச்
சீர்தருஞ்சங்கர னானந்தவின்பங்கை சித்திக்குமே. (கசு)

இன்பவகைசித்தி யிசபரமாகு மிமையமங்கை
யின்பமகன்சங்கரன் றாடொழுதேத்தி யிதையநெகிழ்ந்
தின்பமுகசிந்தையானந்தத்தேறி யிருமனமே
யின்பங்குடிகொண் டுறவாகிநித்திய மெய்திடுமே. (கஎ)

நித்தியவநித்தியஞ் சத்தசத்தாகிய நேர்மையினில்
நித்தியமானது சங்கரன்பாத மல்லாதனவ
நித்தியமென்று சகமாயைநீக்கிய வானந்தமே
நித்தியமாகுஞ் சுகானந்தப்பேரொளி நேர்வருமே. (கஅ)

வரும்வருமென்றிவ் வுலகத்திலாசை மருவிநின்ற
வரும்வருந்துன்பத்தி லாழ்ந்தேமெலிந் தெமன்வாதனைகள்
வரும்வருஞ்சங்கரன் றாளைக்கருத்தில் வையாதமையால்
வரும்வருஞ்சென்ம மரணநரகத்தில் மாய்குவமோ. (கசு)

மாயவனந்தணன் வாசவனெண்டிசை மன்னர்கண
மாயவனந்த நன்னாட்டவஞ்செய்து மறைமுடியு
மாயவன்சங்கரன் றாளையர்ச்சிக்க மகிழ்ந்துசுக
மாயவன்கூட்ட மழியாதெப்போதும் வளர்கின்றதே. (உ௦)

வளர்கின்றவென்றன் பிறவிக்கடலை வறளவைத்து
வளர்கின்றதுன்பத்தின் வேரறுத்தேசுக வானந்தத்தில்
வளர்கின்றவிந்தொளி கண்டங்கெனது மதிமலரில்
வளர்கின்றசங்கரன் செய்ததையென்சொல்லி வாழ்த்துவதே. (உக)

என்சொல்லுவேன்றோல் வினைபின்பகுதி யிடரிற்பட்டே
என்சொன்மனந்தடு மாறியதுதின மேக்கமுற
என்சொல்லுஞ்சத்தமும் பெண்டீர்வலைப்பட் டிரவுபகல்
என்சொல்லுவேனிது சங்கரன்வைத்திடு மெண்ணத்தையே. (உஉ)

எண்ணமொருவழி நிற்கவுமாயை யிடரிற்பட்டே
எண்ணந்தவறிட மண்பெண்டனமென வேங்கிப்பல
எண்ணங்கொண்டெங்கெங்கு மோடியலைய வினைவகுக்க
எண்ணமென்றோ வையனே சங்கராவது வென்னவிதே. (உ

அரிதாகுமானிட யாக்கையெடுப்ப ததுவன்றியே
அரிதாமுறுப்பிற் குறைவின்றித்தோன்ற லகத்தெளிதல்
அரிதாகுங்கல்வியு நற்குணஞான வறிவுகொண்டா
அரிதாகுஞ்சங்கர னானந்தவாரிதி யாகின்றதே.

நனந்தவாரிதிக் குள்ளேயெழு ஞ்சுடராதபம்போ
ஆனந்தச்சங்கர ளுகியசங்கர் னம்புயத்தாள்
ஆனந்தச்சாகர மாடியபோது வகண்டசச்சி
தானந்தத்தோடுற வாமென்றுசொன்ன தருமறையே. (௨௫)

மறையாய்மறையின் பொருளாய்விரிந்து மறைமுடியு
மறையாதுகாட்டிய துண்மையென்றே பிரம்மவஸ்துவிலே
மறையாதுகாட்டி யுலகமயக்கத்தை மாற்றியது
மறையாதுரைத்திடச் சங்கரன்செய்திடு மாறிதுவே. (௨௬)

செய்திடுமாறு செகமாயைமுடிச் செறிந்துமன
செய்திடுந்துக்க மிதுவேசுகமென்றுந் தீமைநன்மை
செய்திடுமின்பமுந் துன்பமுமாகச் செனித்தவுயிர்
செய்திடுமூழ்ப்படிச் சங்கரனூட்டித் திருப்புவதே. (௨௭)

திருப்பூங்கமலத் திருமார்பன்வேதனுந் தேடரிய
திருப்பூங்கமல மலர்த்தாளென்சென்னியிற் சேர்க்கவைய
திருப்பூங்கமலத் திதயத்தயவு செய்தாலதுவே
திருப்பூங்கமலத் தழியாதபேரின்பச் சீர்பெறுமே. (௨௮)

பேரின்பசீரும் பெறலாஞ்சுகானந்தம் பெற்றுநல்ல
பேரின்பச்சீருடை யோர்களைக்கூடிடிற் பேதமற்ற
பேரின்பநிஷ்ட்டையுங் கைகூடுஞ்சங்கரன் பேரருளால்
பேரின்பவாரிதிக் குள்ளேதிளைத்துப் பெருமைபெற்றே. (௨௯)

பெருமைகொலைக்களத் தேநமைதின்றிடும் பெற்றியதாய்ப்
பெருமையத்தாலிச் சகமிசமென்று பிதற்றுகின்ற
பெருமைதனமென்றுஞ் சென்மமரணம் பிறழ்ந்திடுவார்
பெருமையுடையவன் சங்கரன்பாதப் பிணையின்றியே. (௩0)

பிணையுடன்மக்களுஞ் சம்பத்துமேன்மை பெருமைபெற்றுப்
பிணையுடனேயிவ் வுலகத்துள்வாழ்ந்துபின் ளுகவுமோர்
பிணையுடனிந்திர போகமருந்திப்பொன் னுட்டினின்றுப்
பிணையுடன்முன்றனி யாகியசங்கரன் பேர்கொண்டதே. (௩௧)

கொண்டதுகற்பகத் தொம்பதத்தேகூடி கொண்டுமனங்
கொண்டதுநின்றது மெய்ப்பொருளப்பொருள் கொண்டுநிறை
கொண்டதுகண்டதுஞ் சங்கரன்பாதக் குறிப்பினைக்கை
கொண்டதன்றேவிது வானந்தக்காட்சியிற் கூட்டியதே (௩௨)

...ட்டிவைப்பானுங் குளறிவைப்பானுங் குலாவியெனக்
...டிவைப்பானல்லர் கூட்டம்விடாதநற் கொள்கைதனைக்
...ப்பாநிறை சங்கரனேயருக் குண்மலர்த்தாள்
...ன்று நெஞ்சேநிறைகொண்டு கூறுவதே. (௩௩)

நிறைகொண்டசாகர வானந்தந்தங்கிய நேர்மையதாய்
நிறைகொண்டசங்கரன் பாதாம்புயத்தில் நிதநிதமும்
நிறைகொண்டநன்மலர் தூவித்தொழுதிந்த நீர்மைவிடா
நிறைகொண்டவர்க்கு வெளியாகவந்துமுன் னோர்படுமே. (கூ-ச

வந்துமுன்னேநின் றடியார்க்கருள்செய்த வண்மைகண்டு
வந்துமுன்னேநின்று சங்கரசங்கர வரதனென
வந்துமுன்னேசர்க் கெமவாதைநீக்கு மனோகரனே
வந்துமுன்றுய்நின்றென் வல்வினைநீக்கென வந்திப்பதே. (கூ-ரு)

வந்திப்பவருன்னை மாயன்பிரமனும் வானவரும்
வந்திப்பதன்றியு முன்னடியார்தொண்டின் வண்மையிலார்
வந்திப்பதற்கெளிதோ சங்கராசெய்யும் வாறுமியான்
வந்திப்பதற்பகருள்வாய் கடைநோக்கத்தில் வைத்தெனையே. (கூ-சு)

எனையாளுஞ்சங்கரன் றன்னருளுேக்கத்தி லெய்தியவா
றெனையாளடிமைமுன் கொண்டத்திருவிது வெய்தியதும்
எனையாபொருளுயி ராக்கையுமுன்னதென் றீந்துவிட்டேன்
எனையாளுமென்குரு சுவாமியென்றே தொழுதேத்துவனே. (கூ-எ)

ஏற்றியதீபச் சுடர்போன்மனநிறை வெய்தியொளி
ஏற்றியதீதப் புருமத்தியங்கண் டிதையமுறைத்
தேற்றியபோதந்த வானந்தத்தாண்டவத் தேனருந்தி
ஏற்றியவர்க்கருள் சங்கரன்சாயுச்சிய மெய்துவதே. (கூ-அ

சாயுச்சியமெய்துந் தபோதனரானந்தஞ் சார்ந்துவெகு
சாயுச்சியவோசைதனிலொத்து த்வாதசஞ் சார்ந்தமன
சாயுச்சியப்பேரொளி கண்டவர்சங்கரன் றுளிணையிற்
சாயுச்சியமெய்தி யழியாச்சுகந்தனிற் சார்வரன்றே (கூ-கூ

சார்ந்தவினைகளினு லிவ்வுடல்கொண்டு சஞ்சலப்
சார்ந்தவ்வினைப்பிணிப் பாகிமனந்தடு மாறுமியான்
சார்ந்தவினைத்துக ளாகவுஞ்சங்ரன் றுளிணையிற்
சார்ந்தவினைகண்மென் பஞ்சிற்பொறிப்பட்ட தானதுவே (சு0

பொறிப்பட்டசூழலுக் குண்ணைந்துலாவிமுன் போதன்சென்னிப்
பொறிப்பட்டதீவினை யாலேதிரிந்தெமன் போர்த்தொழிலிற்
பொறிப்பட்டங்கட்டிய தூதர்கொண்டேகவும் புன்குரம்பை
பொறிப்பட்டுநீறகவு மாகாதுசங்கர பூரணமே. (சு௪

பூரணபோக நிறைவாகியெங்கெங்கும் பூர்த்தியதாய்ப்
பூரணகெர்ப்பம தாகிச்சுகானந்தம் பொங்கருளின்
பூரணங்கொண்டது சங்கரன்சேவடிப் போதுநித்திய
பூரணகைவல்லிய மேவியெப்போதும் பொருந்திடுமே.

டுமென்றுவந்திடுந் தீவினைக்கஞ்சித் தினமனைக்
நிடுமென்றுபாபத்தைச் செய்யாதிருக்க வத்திவினைகோத்
திடுமென்றுமூன்பத நம்பினன்சங்கர சென்னியில்வைத்
திடுமென்றுமானந்தங் குன்றுதிருக்கவுந் தேடுவதே. (௪௨)

தேடியலைந்து பொருண்மேலுமாசையிற் சிக்கியின்பந்
தேடியிதாமென் றிருப்பேனுடல்விடத் தென்றிசைக்கோன்
தேடிவரவு மருண்டேபுலம்பித் திடுக்கிட்டுனைத்
தேடியபோது வரவேண்டுஞ்சங்கர சீக்கிரமே. (௪௩)

சீக்கிரமாகப் பொருடேடிமாதரைச் சேர்ந்துவிதஞ்
சீக்கிரமற்பமு மீயாவகைகொண்டு சேர்த்துவைத்துச்
சீக்கிரமாண்ட வகைகண்டுபின்னந் தெளிகின்றிலீர்
சீக்கிரம்பூசித்துச் சங்கரன்றாளிணை சேர்மின்களே. (௪௪)

மின்களையொத்தவிவ் வாழ்வுசதமென்று மேதினியில்
மின்களையொத்த விடையாளாக்கூடி விதம்விதமாய்
மின்களைநேரொத்த பூஷணம்பூட்டி மிளிர்ந்தவிதம்
மின்களைச்சங்கரன் செய்தவிதமிது வேண்டினர்க்கே (௪௫)

வேண்டியபேர்க்கிங் கெதுவோவதுவரு மிக்கசுகம்
வேண்டியபோதந்தச் சங்கரனுண்மை வெளிப்படவும்
வேண்டிநைந்தேநிற்குந்தொண்டரிணக்கமு மீதுவரா
வேண்டிநிறைபரி பூரணியோடு வெளிப்படுமே. (௪௬)

வெளிப்படவேதவஞ் செய்துவருந்திய வித்தகர்தாள்
வெளிப்படவேத்து மடியார்கள்கூட்டம் விடாதிருந்தால்
வெளிப்படையாகவுஞ் சங்கரன்வந்து விடையுகந்து
வெளிப்படச்சத்தி யுடனேமுன்வந்து விளங்குவதே. (௪௭)

வந்துவிளங்கும் விடையுகந்தேறிப்பைம் மாசுணப்பூண்
வந்துவிளங்குஞ் சடைமீதிற்கங்கையு மாமதியும்
வந்துவிளங்கு முமையொருபாகத்தில் மான்மழுவும்
வந்துவிளங்கச் சங்கரனேயென்று வாழ்த்தினர்க்கே. (௪௮)

வாழ்த்துவதுன்னையு மாயாவிநோதத்தின் வன்மைகண்டு
வாழ்த்துவனியானே மறைமுடிவாகிய வாக்கியமே
வாழ்த்தியசங்கர னன்புமலர்கள் வளர்கவென்றும்
வாழ்த்தும்படிக்கருள்வா யிருணீக்கிய மாணிக்கமே. (௪௯)

மாணிக்கமன்னவனை வாதவூரனன் மறையவர்க்காம்
மாணிக்கஞ்செய்து வழுதியுவந்திட மாற்றியபேர்
மாணிக்கவாசக மென்றழைத்திட்டநல் வாமேனியு
மாணிக்கஞ்செய்யா தருடருஞ்சங்கர மாதவமே

தவஞ்செய்தநில்லை தவறேபுரிந்து தளர்ந்துமலைத்
தவஞ்செய்துபாசக் கடலிலழுந்தித்தனையுணரா
தவஞ்செய்துகாட்டி யறியாவெனையுன்றன் றாணிழலில்
தவஞ்செய்ய வைப்பதென்றோ சங்கரானந்தமாகிநியே. (௩

நிதிபதியொத்திவ் வுலகத்தில்வாழ்வுறு நேரும்வைத்து
நிதிபதியொத்திட வில்லாதிரக்க நெடுந்துன்பமாய்
நிதிபதித்தாண்ட வகைநோக்கில்வல்வினை நேர்மையது
நிதிபதியாயினுஞ் சங்கரனட்டத்தி னின்றதுவே. (௩

அதுவிதுவென்று விகற்பசங்கற்பத்திலாகிவந்த
அதுவிதுவாகிய தத்துவஞான வகண்டத்திலே
அதுவிதுவென்கின்ற சங்கரன்றன்குரு வாகிவந்து
அதுவிதுநீங்கி வானந்தவாரி யமர்விப்பதே. (௩

அமரர்கள்வாழ்த்திட வாலத்தையுண்டின் னமுதத்தையே
அமரர்களோடு மடியார்கணங்களுக் காக்கிவைத்தே
அமரர்தங்கோனு மயன்மாலசுகிக்கவு மன்புவைத்தே
அமர்ந்திடுஞ்சங்கரன் பாதாம்புயத்தினி லன்புவையே. (௩

வையகங்கைவச மாதங்கமாக்கரு மாவிரதம்
வையகத்துள்ளநன் மாமணிக்குப்பலு மைந்தர்கள்பூ
வையகத்தின்புற வந்திடுஞ்சங்கரன் மாணடிப்பூ
வையக்கொண்டிட வர்ச்சித்தவர்க்கிது வாய்த்ததுவே. (௩

வாய்த்ததுமார்க்கண்டர்க் கன்றியுமன்பர்கண் மாண்டப்பூ
வாய்த்ததுகொண்டந்தச் சங்கரன்றாளில் மனமுவந்து
வாய்த்ததிதுவென வர்ச்சிக்கவேயம வாதனைபோய்
வாய்த்ததுநித்தியஞ் சத்தியமாமறை வாழ்த்திடுமே. (௩

வாழ்த்துநெஞ்சேயுனக் குண்மையைநாடி மனமுருகி
வாழ்த்துமடியவர் கூட்டத்தைக்கண்டு மனமுவந்து
வாழ்த்துமப்போதின்ப வெள்ளம்பெருகி மதிமறந்து
வாழ்த்திடச்சங்கரன் றுணைகுமென்பது வண்மையதே. (௩

வண்மைநிறைவு வளமைபுகழ்ச்சியு வந்திடுஞ்சொல்
வண்மையைக்கொண்டிடு சங்கரன்றன்னடி யார்கள்குண
வண்மையறிந்தவ் வழிநிற்கவேயின்ப வாரிதியின்
வண்மையுளே குடி கொண்டழியாமுத்தி வந்திட்டதே. (௩

முத்தியைவேண்டி யலைந்தேயுழன்று முதுமறைசொல்
முத்தியைவேட்டுநின் றட்டாங்கயோகத்தி லேமுயன்று
முத்தியதத்துவ ஞானமுண்டாகிமுன் வாதனைபோய்
முத்தியிதேயென்று சங்கரனை மயல்விட்டதே.

விற்பனமுள்ள பெரியோரடித்தொண்டின் மீதுமன
விற்பனங்கொண்டந்த வேதாந்தச்சீரின் விளக்கநிறை
விற்பனமாகிய ஞானசுகாநந்த மேவுமறை
விற்பனத்தாலன்றிச் சங்கரனன்பு விளங்கிடுமே. (௬0

விளங்குவதெங்கெங்கு மொன்றாய்நிறைந்து மிருந்தவொளி
விளங்குவசத்துச்சித் தானந்தமாகி விமலமதாய்
விளங்கும்பரப்ரம்ம ரூபத்திலுற்றிட விண்ணிறைந்து
விளங்கிடுந்தற்பத சங்கரனாகிய மெய்வடிவே. (௬௧

வடிவேனிகர்விழி யாளுறைபங்கன்செய் மாயவித்தை
வடிவேசெகமென்று சீவவுபாதியை மாற்றியவர்
வடிவேநிறைவொளி யாகியசங்கரன் மாதிருச்சே
வடிநீழல்பெற்றுச் சுகாநந்தவெள்ள மருவியதே. (௬௨)

மருவியராகத்து வேஷத்திலபி மானத்தையே
மருவியதன்பெண்டுபிள்ளைபதார்த்திலேமனது
மருவியிதுசுகமாமென்றலைந்திந்தவாதனையே
மருவியழிவதற்கோ சங்கராநீ வகுத்ததுவே. (௬௩)

வகுத்ததுமாண்பெண்ணலியெனமூன்றுவகைவிபரம்
வகுத்தகல்லாதுலகத்திலுயிர்களில்மானிடராய்
வகுத்துமயிவினிருகான்மிருகமதாயிருக்க
வகுத்ததென்னோவைய சங்கரநீசெய்த வாதினையே (௬௪)

தினைத்தேனருந்தவுஞ்செல்வதுவோவிச்செகத்தின்முழு
தினைக்கொண்டகண்டநிறைவாகியெங்கெங்குமேசெறிந்த
தினைக்கண்டருதசுகவாரிதிக்குள்செனிக்கவைத்த
தினைக்கண்டருந்தவுஞ்சங்கரன்சேவடித்தேன்பொழிவே. (௬௫)

பொழிந்திடுமாநந்தபாஷ்பநிறைபரிபூரணமொப்
பொழிந்திடுமானந்தவாரிதிளைக்கப்புனிதமறை
பொழிந்திடும்வாக்கியத்தாலிச்செகத்தினிற்போந்தவிருப்
பொழிந்திடச்சங்கரன்றன்னருணித்தியபூர்த்தியதே. (௬௬)

பூர்த்தியதாய்நின்றசங்கரன்றன்னருள்பூண்டுமனப்
பூர்த்தியடைந்தவடியார்சுகிக்கவும்பொன்னடியிற்
பூர்த்தியதாகவும் யானாசைப்பட்டும் புனிதமனப்
பூர்த்தியதாயருடந்திடச்செய்ததுபுண்ணியமே. (௬௭)

புண்ணியஞ்செய்து பிறந்தோர்சுகிக்கப் பொருதமனப்
புண்ணியத்தாலிச்செகநிசமாமென்றுபோந்தலைந்து
புண்ணியநீக்கிப் பொருடேடிவைத்தல் புதல்வர்செய்த
…யக்காலிதுசங்கரனிட்டத்திற்போமதுவே. (௬௮)

அதுவேயிதென்று மிதுவேயதென்று மகப்பிரமம்
அதுவேநிறைந்திடு மத்வைதமாமென் றருமறைகள்
அதுவேமொழிந்திடு மாப்தநல்வாக்கியத் தாசைவந்தால்
அதுவேசுகவடி வாயிடுஞ்சங்கர னாகமமே. (சு

ஆகமங்கொண்டுசரியையிலேயுழன்றனபின்பு
ஆகமங்கொண்டுகிரியாவிதிசெய்ததிலிருந்து
ஆகமத்தாலுளவஷ்டாங்கயோகத்திலன்புகொண்டால்
ஆகமசங்கர னாகியஞான மகப்படுமே. (எ

அகப்படும்பேதமறியாமறைத்திடுமாவரணம்
அகப்படுமொன்றையற்றென்றுணக்காணுமப்யாசத்தினால்
அகப்படுந்துக்கத்துளாகுமெனைக்குருவாகிவந்தே
அகப்படுஞ்சங்கரன்றன்னருளானந்தமாக்கியதே. (எ

ஆனந்தமாயென்னறிவாய்நிறைந்தவகண்டசச்சி
தானந்தவெள்ளப்பெருக்காயெனையதிலேயழுத்து
மானந்தத்தாண்டவசங்கீதராகத்தறிவொன்றியே
ஆனந்தமுற்றியசங்கரனேயமதானதே. (எ

அன்னமயத்தொடுப்ராணமயமறியாதமனம்
அன்னமயமன்றிவிஞ்ஞானமானந்தமாகுமயம்
அன்னமயம்பஞ்சகோசத்துணின்றதநுவதுவாம்
அன்னமயத்தையறுத்திடச்சங்கரனாகுமே. (எ

ஆகாயண்டகடாகத்திலேமுடியாகியதான்
ஆகாயபாதலமீதேநிறைந்ததுமஷ்டதிசை
ஆகாரமுச்சுடர்நீள்விழியிவ்வகிலமெல்லாம்
ஆகாங்கொள்சங் கரனேவிராட்டிரு வானதுவே. (எ

ஆனந்தவானந்தத்தாண்டவன்சங்கரனார்பதத்தில்
ஆனதுவைந்தையுமாட்டியலரிட்டடிபணியல்
ஆனதுபுண்ணியமல்லாதவர்கட்ககப்படுமெய்
யானதுவாலறி வேசுகமாகி யமர்கின்றதே. (எ

சுகமாயிருந்ததெதுவோ வதுதற் சொரூபமென்றும்
சுகமாயிருக்கவுந் தானறியாதற்பத் தொன்றிநின்ற
சுகமேயிதுவென்று துக்கத்தைத்தாங்கிச்சுழன்றுபர
சுகமேனைவிட்டகதச சங்கரன்மேற்குற்றஞ் சொல்வதென்னே. (எ

சொல்லுவதொன்றையுமியானறியேன்வர்துசூழ்வினையென்
சொல்லுவனீவினையால்வந்ததுன்பத்தையேசுமந்து
சொல்லும்பொருளுமறியாதுழன்றெமனாதருக்குச
சொல்லுவதென்னையாசங்கராசெப்புக்கொண்டிடவே.

தொண்டரிடஞ்சென்றடிபோற்றிவித்தமுஞ்சூழ்க்கிருந்து
தொண்டுபுரியத்தவமெய்தும்போதெமதுகர்ணங்
தொண்டினுக்கஞ்சிப்பின்வாங்கிடவேசுகமாகியந்தத்
தொண்டுபுரியவருடருஞ்சங்கரன்றேற்றமிதே. (எஅ)

தோற்றத்தைநாடிச் சுகவடிவாகிய தூக்கின்ற
தோற்றத்திற்பிரம்மவரிஷ்டத்வமாகிச்சுகித்திருக்குந்
தோற்றமுண்டாம்பொழுதேவருஞ்சங்கரன்றாயிலே
தோற்றமிதுவன்றியல்லாதவர்க்குச்சுதந்தரமே. (எகூ)

சுதந்தரமென்றிப் பிரபஞ்சவாழ்விற் சுகித்தமன
சுதந்தரமாகியதுக்கத்திலாழ்ந்துதொடர்ந்தகப
சுதந்தரமாமென்றுசங்கரநின்பதத்தொண்டெனக்குச்
சுதந்தரமாயருள்வாயிருண்மாயைத்தொடக்கறுத்தே. (அ0)

மாயையின்வல்லபமென்சொல்லுவேனன்மதிமருண்டு
மாயைமலவலிதுக்கசுகமிருண்மாறுமொளி
மாயையினாலொன்றையொன்றாகக்காணுமிவ்வாதனையா
மாயையறுத்திடச்சங்கரன்ஞானம்வளர்ந்திடுமே. (அக)

வளருமஞ்ஞானத்தின்மூலியத்தால்வருமாவரணம்
வளருமதில்வந்தவிட்சேபசத்தியின்வல்லபத்தால்
வளரும்பரோட்சமபரோட்சத்தாற்றுக்கமாநிவர்த்தி
வளருஞ்சிவானந்தஞ்சங்கரனேயம்வருவிப்பதே. (அஉ)

வரும்வினைதானற்றுச்சஞ்சிதநீங்கிமலப்பரிவு
வருஞ்சுகமூற்றுப்பிராரத்வமுண்டுமகிழ்ச்சியதாய்
வரும்வித்துமாகிவரன்வரியானும்வரிஷ்டனுமாய்
வருமுத்தன்சங்கரன்வாக்யமிலக்கியமானதொன்றே. (அங)

ஒன்றாயருமைப்பலவாய்விரிந்திவ்வுலகமெங்கும்
ஒன்றாகிநிற்கியநிட்களநிர்க்குணவுண்மையிலே
ஒன்றாகிநின்றவரானந்தத்தேறலையுண்டுண்டென்றும்
ஒன்றாகித்தானன்றிச்சங்கரனைதொருபதமே. (அச)

பதஞ்சலிவியாக்கிரபாதர்வர்க்குப்பரிந்துநட்டம்
பதஞ்சலித்தாடியபாதாம்புயத்திற்பரிவுவைத்துப்
பதஞ்சலியாவகைநாடோறுமேத்திடும்பண்புவந்தால்
பதஞ்சலிப்பின்றியச்சாரூபஞ்சங்கரன்பாற்பெறுமே. (அரு)

பெற்றிடுமன்னையிவ்வுளன்றுவந்திகைப்பிட்டினையே
பெற்றிக்குகூலியா ளாகவுமண்சுமந் தெபிரம்பாற்
[illegible]ம்பிடவேற்றவடியெவ்வுயிர்தம்முடல்பிறங்கப்
[illegible]வளிக்குஞ்சங்கரனன்றிப்பின்னுளதே. (அசா)

உளத்தெளிரியுணர்வான்றதுணைமையொருமுனியாய்
உளத்தேக்கண்டன்புருவாயமுதிடவுண்டுபின்னும்
உளத்தேநடுங்கிடக்காளையுருக்கொண்டொருமழுவாய்
உளத்தேந்தச்சங்கரன்றனடியார்க்குரிமைவைத்தே. (அ

வைத்திடும்பெண்ணொருபாகத்திலேகரமான்மழுவும்
வைத்திடுஞ்செஞ்சடைமீதேபுனற்கங்கைமாமதியும்
வைத்தவிடையுகந்தேறியடியார்மனதிலன்பு
வைத்திடச்சங்கரன்றன்சகளீகரம்வந்திடுமே. (அ

சகளத்தினைவிட்டுத்தற்பதனாடித்தனித்திடவ
சகளத்தமாற்றியதீதத்தில்நிட்களத்தன்மையைவைச்
சகத்தியானத்திலானந்தநிஷ்டையுந்தான்வரவி
சகளத்திற்சங்கரன்றன்வடிவேதனதானந்தமே. (அக

அந்தநடுமுனைதானதுமின்றியதீதத்திலே
ந்தநடுமுனைமீதேறிமேல்வட்டமச்சுழியில்
ந்தநடுப்பன்னிருவிரன்மேலடையாளங்கண்டு
ந்தரநடுவெளி யாதபஞ்சசங்கர னுஞ்சுடரே. (கூ

சுடர்விளக்காய்நின்றுப்ருமத்யந்தனிற்றோற்றியவச்
சுடர்விளக்கின்னொளியின்னதென்றேயறிந்தொன்றியனற்
சுடெரித்துவினைநீற்கஞானத்தொளிபிறந்து
சுடரிடனந்தநற்சூரியன்சங்கரன்சோதிபெற்றே. (அ

சோதினந்தமச்சந்திரன்சூரியனுளதச்
சோதிப்பதுவல்லாதுவேறுந்தோன்றாசுபஞ்
சோதிநிலையறிவானந்தந்தானெனத்தோன்றியசித்
சோதியைச்சங்கரன்றனன்றிவாயிலெசொல்லுதற்கே. (கூஉ

சொல்லும்பொருளும்பூவாசமும்போலுஞ்சுகமிதென்றே
சொல்லும்பொருளதாவாயாரச்சொல்லவுந்தோற்றிடுமோ
சொல்லும்பொருளையுணர்ந்தோரிடஞ்சென்றுதொண்டுபட்டால்
சொல்லும்பொருளறுமோனத்தைச்சங்கரன்சூட்டுவதே. (கூங

சூட்டவும்வேறொருபுஷ்பமுமில்லை யென்றொல்வினைநஞ்
சூட்டவுமாய்ந்திவ் வுலகத்திலாசை கொண்டேசுகந்தஞ்
சூட்டியபூங்குழ லார்கள்மயக்கந் தொலைத்துனடி
சூட்டியருள்வதென்றோ சங்கராவெனைத் தோய்ந்திடவே. (கூச

தோய்ந்துன்னடியிற் சுகம்பெற்றுவாழ்ந்திடுந் தொண்டர்களைத்
தோய்ந்துநின்றேத்திடும் வல்லபங்கொள்மனத் தொல்லையறாத
தோய்ந்துசும்மாயிருந் தானந்தநிஷ்டையிற் றேன்றுசுகந்

சடமாகுமிக்கிரி யங்களைக்கொண்டுநின் றன்பணியச்
சடமாயிதற்குத்தரமோ வுனதருள் சார்தலின்றற்
சடமாயிருந்து நினைக்கத்துதிக்கவுஞ் சார்ந்தமையாற்
சடமாய்க்கவென்னை மருந் சங்கரனேயன்றித் தான்வருமே. (௯௬)

வருகவருகநின் மெய்ஞ்ஞானமோன மனோகரமே
வருகவருக தவியாநின்ற மதியமுதே
வருகவருக சுகானந்தமேநிறை வார்சடையே
வருகவருகவையாசங்கராநின் மலர்ச்சரணே. (௯௭)

சரணஞ்சரண மயன்மாற்கரிய தனிச்சுடரே
சரணஞ்சரண மடியார்க்கெளிய தயாபரமே
சரணஞ்சரணஞ் சுகநிறைவாகிய தற்பதமே
சரணஞ்சரணமென் றேசங்கராசரண் போற்றியதே. (௯௮)

போற்றியருளுக வன்பாகத்திற் புகுநிறைவே
போற்றியருளுக வெங்குமொன்றாய்நின்ற பூரணமே
போற்றியதீத வொளியாய்நிறைந்தநின் புருமயமே
போற்றிடச்சங்கரன் றனன்றிவேறிப் பூவிலையே. (௯…

அறியாக்குழவி மழலைமொழியினுக் கன்புவைப்ப
தறியாமையோவது போலுமென்புன்சொல் லறிவுடையோ
ரறியாதமைகண்டு சங்கரன்பேருக் ககமகிழ்வர்
அறிவானசங்கர னந்தாதிசுப்பைய னுக்கியதே. (…

நிறையாயிரத்தெழு நூற்றித்தொண்ணூறு நிகழ்சகப்த
நிறையும்பிரபவ வாண்டினிற்சித்திரை சேர்மதியில்
நிறைபுயிரோகிணி கூடியநாளி னிலவியெங்கு
நிறைகின்றசங்கர னந்தாதிமுற்று நிறைந்ததுவே

சங்கரனந்தாதி முற்றுமுற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

கணபதிதுணை.

# சிவசங்கரபதிகம்

மருவார்ஞானக்குழலாளமுத மாதோர்பாகாமறையின்முடிவுங்
கருதாவயன்மாற்கரியாயடியார் கருத்திற்கினியகனியேயமுதே
குருவாய்வந்தென்னுளமேபுகுந்து கொடியபிறவிக்கடல்வேரறவுந்
திருவேயிறையவருளேபுரிவாய் சிவசங்கரனேசிவசங்கரனே. (௧)

நித்[...]ே[...]ன்மெய்யத்தளர்ந்தேனிமலாவதுமைப்பிணியான்மனனைந்
துற்றே[...]ாடியலையக்குலையச் சென்றேதிரிந்துஞ்சுகமேயறியேன்
முத்[...]வளக்குன்றேதேனூர் மொழியாள்பாகத்தமுதேயெனது
சித்தந்தெளியவருளேபுரிவாய் சிவசங்கரனேசிவசங்கரனே. (௨)

எந்[...]ுவிக்கிணையோர்பிணையு மெய்தாகிடாற்படநீதந்த
மை[...]தார்க்குறுகியானுய்நீயென் மனதிற்கினியதுணையும்வருமென்
றிந்[...]பபடியானிரவும்பகலுமெண்ணியெண்ணிப்புண்ணுயமெலியுஞ்
சிந்[...]தத்துயர்தீர்த்தருளேபுரிவாய் சிவசங்கரனேசிவசங்கரனே. (௩)

இ[...]ர்மாயையிடைப்பட்டடியேனிரவும்பகலுமென்னுதென்ன
பொரு[...]க்கருதிப்புகுதாவிடமும்போந்தேயோடிப்புண்ணுய்மனது
மருளே[...]காண்டிங்கலையத்தகுமோ மணியேயென்றன்மனதிற்கினிய
தெருளே[...]காட்டியருளேபுரிவாய் சிவசங்கரனேசிவசங்கரனே. (௪)

அன்பர்[...]கினியசுடரோமணியே யல்லாதார்க்குமிடராம்பிணியே
துன்பக்[...]டலில்விழுந்தேயழுந்தித் துணையுமயிணையுந்தோன்று தபு
துய்ம், என்[...]பாலொத்தபடிநன்புவியி லிலையோவுனையானென்[...]
யணது,தென்பேபெறவேயருளேபுரிவாய்சிவசங்கரனேசிவசங்[...]னே

[...]கான்றியவறையுமறையுந் தாய்போலோங்கித்தளருமுயிருக்
குணைத்தாளறியவுரையும்பொருளு முணர்வாலறியப்பெற்றேருலகத்
திணைத்தானறியும்பகுதியறிவார் தெளியாதெவையுமலியேனழல்வா
தெனைத்தாளையாவருளேபுரிவாய் சிவசங்கரனேசிவசங்கரனே. (௫

நிஷ்டைகூடிச்சுகமுற்றடியார் நேராவென்றுநிறையானந்தத்
திஷ்டயோகத்துடனேகூடியிருக்கவெளியேனோமாந்தோடிக
கஷ்டமுறவேயலையத்தகுமோகண்ணேகண்ணுண்மணியேயெனையக்
சிஷ்டனுக்கியருளேபுரிவாய்சிவசங்கரனேசிவசங்கரனே.

மானேர்நோக்கிமனுளாவடியார்வாழ்வேவயிரத்தினமாமணியே
தானேயில்லாத்தனியேயினியுன்றாய்வேயனுமாத்திரமேவருமோ
[...]மறையின்முடிவாமலரிலுறை

கொடுங்கோட்டிட ருமைப பகடேர்ந்தழற்கண் குதம்புங்குருதிச்சடை
நெட்டெயிறுங், கடுமுட்சூலப்படையும்பாசக் கரம்வீசிடவேகருமா
மலைபோல், கடுவன்படையோ டடவெய்திடயா னடுங்கக்கணைநீகரு
வெள்விடையும், மிடமேயுமையோ டருளேபுரிவாய் சிவசங்கரனே
சிவசங்கரனே. (௯)

என்றனுடலுயிரும்பொருளுமெல்லா முனதென் றீந்தேன் றீர்ந்தேன்
வந்தென் குடியையடிமைக்காளாய் வைத்தேயாள்வாய்வரதாசரதா
பந்தத்தளைவேரறவேசுகமே பருகிப்பெருகிப்பாலன்பருகச்
சிந்தைக்கனிதாயருளேபுரிவாய் சிவசங்கரனேசிவசங்கரனே. (௧௦)

அய்யன்சிவசங்கரனைப்பணிய வருமாமறையுமய்யாநெடிய
மெய்யன்பினருக் கெளிதாகிமன்றும் விதியான் முன்மேலோ[illegible]ளம்பு
மொழிகொண், டுய்யுந்திறமேபருளுமெண்ணே யுணர்வேசந்[illegible]மறியா
மனசுப், பையன்றமிழ்ச்சுவைத்தும்வலலார் பரமசுகப்பற்றழி[illegible]கவரோ.

சிவசங்கரபதிகம்
முற்று முற்றிற்று.
திருச்சிற்றம்பலம்.

சென்னை
மு· துரைசுவாமிக்கவிராயரியற்றியது
ஆசிரியவிருத்தம்.

[ப்
மருளைக்கொண்டயர்ந்திடாப் பொய்கைநல்லூர்ச்சுப்பையன்மதிக்குங்கல்வி
பொருளைக்கொண்டத்திறத்தி னற்கவிசொல்புலவர்கண்முன்புந்தி[illegible]ன்பால்
அருளைக்கொண்டந்தாதி பதிகமுஞ்சங்கரநாமத்தறைந்தானென்றே
தெருளைக்கொண்டவர்வியக்க கருணைநூல்செவத்தானச்சியற்றி[illegible]னே.

இஃது இங்கிலீஷ் ராஜதானி
காலேஜி தமிழ்ப்புலவராகிய
ம-ள-ள-ஸ்ரீ-புதுவை நயனப்பவுபாத்தியாயருக்கும்
திருத்தணிகை,
ம-ள-ள-ஸ்ரீ சரவணப்பெருமாளையரவர்களுக்கும்
மாணாக்கராகிய
இராயபுரம்-சுப்பிரமணிய உபாத்தியாயரியற்றியது
ஆசிரியவிருத்தம்.

சுபமிகுகைலைப்பரம்பரையான சந்ததிக்குரவர்களொன்றாஞ்
சுகபரஞ்சோதிமுனிவர்மரபின் வயித்தியலிங்கதேசிகன்சூழ்
மிகுவழிச்சுப்பையதேசிகனைச் சைவமாசமய தீக்ஷிதனித்
கரணிசூழ்வருணகுலத்தவர்சிலர்க்குஞ்சமயவாசிரியனுமானோன்
வசங்கரனந்தாதிநற்பதிகமேதையோர்தமதுளங்களிக்க
ளிரிருவகையாலுரைத்தனன் ஜீவர்பாவருந்திவினைநீங்கி
லோச்சாலோகம்முதலாக நீடுசாயுச்சியமீவை